DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. C.C.No.401/2025 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | மோகன்ராஜ் |
| Father's Name | த/பெ. மைக்கேல்ராஜ் |
| Village | தூத்துக்குடி |
| Taluk | |
| Age | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.08.2026.

<u>எதிரி ஆஜர்</u>

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து டுவிபுரத்தில் மெடிக்கல் கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது முன்னால் மனைவி அருள்ஜோதியின் தம்பிகள். கடந்த 04.06.2024 அன்று வழக்கம் போல் நான் எனது மெடிக்கலில் இருந்தேன். அப்போது இரவு 10.15 மணி இருக்கும் அப்போது நானும் எனது அண்ணண் முத்து செல்வராஜ் கடையில் இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் எனது கடைக்கு வந்தார்கள். வந்தவர்கள் இருவரும் என்னை தேவடியா மகன் புண்டா மவன் என்று வார்த்தைகளால் பேசி என்னை கஷ்டபடுத்தினார்கள். பேசிக்கொண்டிருந்தபோது கடையில் வைத்திருந்த

லயன் டேட்ஸ் சிரப் தேன் பாட்டிலை எடுத்து 1வது எதிரி எனது முகத்திற்கு நேராக எறிந்தார் அதை நான் தடுத்தபோது அது எனது வலது தோளில் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டது. பின்னர் உடனடியாக 1வது எதிரி அவரது கையால் எனது முகத்தில் குத்தினார். கடையில் முன்னால் மாட்டிருந்த டியூப் லைட்டை எடுத்து என்னை அடிக்க முற்பட்டார் நான் தடுத்துவிட்டேன் நான் தடுக்கவில்லை என்றால் அது எனது முகத்தில் பட்டிருக்கும். கடையில் இருந்த பாட்டலை தள்ளிவிட்டு சேதப்படுத்தினார்கள். நான் வலி தாங்க முடியாமல் அருகில் இருந்தவர்களை கூப்பிட முற்பட்டபோது எதிரிகள் இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் உடனடியாக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை நான் மத்தியபாக காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

**ஒம்/-L.மகேஸ்வரி,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**